# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி
## (திருத்தம்)

***1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர் அவர்களால் 2013, ஓகத்து மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, யூலை மாதம் 23 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

**[ 263 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## சட்டப்பயன் பற்றிய கூற்று

வாசகம் 2 : இவ்வாசகம், 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தேசிய விஞ்ஞான தாபனத்தின் பணிப்பாளரினது, கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் பணிப்பாளரது மற்றும் நவீன தொழில்நுட்பங்களுக்கான ஆர்தர் சீ. கிளாக்கு நிறுவகத்தின் பணிப்பாளரினது பதவிப் பெயரை அத்தகைய ஒவ்வொரு நிறுவகத்தினதும் "பணிப்பாளர் தலைமையதிபதி" என்று மாற்றுவதற்கானதாகும்.

# விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி
# (திருத்தம்)

ச.வ.ஓ. 20/2012

## 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, விஞ்ஞான தொழில்நுட்பவியல் அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்துக்கும் ஏனைய எழுத்திலான சட்டத்திற்குமான பொதுவான திருத்தம்.

2. (1) (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டம், பின்வரும் சொல்லமைப்புக்கள் முதன்மைச் சட்டவாக்கத்தில் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ, அங்கெல்லாம் அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் சொல்லமைப்புக்களை இடுவதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) "தாபனத்தின் பணிப்பாளர்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "தாபனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும் ;

(ஆ) "தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் பணிப்பாளர்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும் ;

(இ) "கிளாக்கு நிறுவகத்தின் பணிப்பாளர்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "கிளாக்கு நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும் ;

(ஈ) "பணிப்பாளர்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும் ; அத்துடன்

2-PL 007525 -650 (2013/08)

(உ) "கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொல் லமைப்பை இடுவதன் மூலமும்.

(2) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், கடிதத் தொடர்பில், படிவத்தில், வேறு சாசனத்தில் அல்லது ஆவணத்தில், முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவின்கீழ்த் தாபிக்கப்பட்ட தேசிய விஞ்ஞான தாபனத்தின் பணிப்பாளர் அல்லது முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் பணிப்பாளர் அல்லது முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவின்கீழ்த் தாபிக்கப்பட்ட நவீன தொழில்நுட்பங்களுக்கான ஆர்தர் சீ. கிளாக்கு நிறுவகத்தின் பணிப்பாளர் தொடர்பாகச் செய்யப்பட்ட "பணிப்பாளருக்கான" ஒவ்வொரு குறிப்பீடும், இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்தும் மற்றும் அதன்பின்னரும், விடயத்திற்கேற்ப, முறையே தேசிய விஞ்ஞானத் தாபனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் பணிப் பாளர் தலைமையதிபதிக்கு அல்லது நவீன தொழில்நுட்பங்களுக் கான ஆர்தர் சீ. கிளாக்கு நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமை யதிபதிக்குச் செய்யப்பட்ட குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

**ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேஜன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்